கப்டன்

# என் சோமு



நிகழ்வுப் பதிவுகள் ஊடாக
நிறைமனிதரின் நிஜவாழ்வு...

விடை தந்தோம். சென்றுவா செயல் வீரா...!

- அரசடி நண்பர்கள்
28.10.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிஜ வாழ்வின் நிழல் பதிவுகள்....!

# கப்டன் என். சோமசுந்தரம் J.P

( யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியரும், விடுதி அதிபரும், மாணவர் தேசிய படையணி மற்றும் பாண்ட் அணி ஆகியவற்றின் பொறுப்பாசிரியரும், ஆங்கில ஆசானும், கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும் மற்றும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் சங்கம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், சைவ பரிபாலன சபை, ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், யாழ் மாவட்டத்தில் பல்வேறு விளையாட்டுத்துறை அமைப்புகளையும் கட்டி வளர்த்த விளையாட்டுத்துறை நிர்வாகியும் )

**26.12.1933**

– மலேசியா போட்டிக்சன் நகரில் சோமசுந்தரம் பிறந்தார்.

| | | |
|---|---|---|
| தந்தையார் | :- | கந்தையா நாகலிங்கம். போட்டிக்சன் நகரில் அரசாங்க வைத்தியசாலை ஊழியர். |
| தாயார் | :- | சிவபாக்கியம் |
| இளைய சகோதரிகள் | :- | தனலக்ஷ்மி, இந்திரமலர், சந்திரமலர். |
| ஆரம்பக் கல்வி | :- | மலேஷியா செரம்பான் நகரில் உள்ள 5 ஆம் ஜோர்ஜ் மன்னர் கல்லூரியில் சிறுவயதிலேயே சிறந்த ஹொக்கி வீரராகத் திகழ்ந்தார். |

**மார்ச் 1950**

- யாழ். இந்துக் கல்லூரியில் மாணவனாகப் பிரவேசம்.
- சிறந்த மாணவனாக, மாணவர் முதல்வனாக, மெய்வன்மை வீரனாகத் திகழ்ந்தார்.
- ஆங்கில மொழியில் விசேட தேர்ச்சி பெற்ற மாணவனாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காசிப்பிள்ளை இல்லத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி குறுந்தூர, நெடுந்தூர ஓட்டங்களில் சாதனைகள் புரிந்தார். இல்ல மெய்வன்மைத் தலைவராகவும் இல்லத் தலைவராகவும் செயற்பட்டு சகல வீரர்களையும் திறம்பட வழி நடத்தினார். யாழ். மாவட்டப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டிகளில் முதலிடங்கள் பலவற்றைப் பெற்றார். பாடசாலையின் சார்பில் அகில இலங்கைப் பாட சாலைகள் மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றினார்.
- கல்லூரி உடற்பயிற்சி அணிக்கு தலைமை தாங்கினார். இவர் காலத்தில் யாழ். இந்து உடற்பயிற்சி அணி மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை முதன் முதலாகப் பெற்றது.
- கல்லூரி படைபயில் குழுவுக்குப் பொறுப்பான சார்ஜன்டாக சிறப்பு சேவை. சார்ஜண்ட் நிலையிலிருந்து "Warrant Officer - II and appointed Company Sergeant Major" பதவிக்கு உயர்ந்தார்.

**28.08.1960**

- யாழ். இந்துக் கல்லூரி அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படுவதற்கு சற்று முன்னர் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

**1960 முதல் 1964 வரை**

- அதிபர் வி.எம்.ஆசைப்பிள்ளை, ஸி.சபாரத்தினம் ஆகியோரின் கீழ் யாழ்.இந்துவில் ஆசிரிய சேவை.
- கல்லூரி மெய்வன்மை அணி, உடற்பயிற்சி அணி ஆகியவற்றின் பயிற்சியாளர்.
- கல்லூரி படைபயில் குழுவின் பொறுப்பாளர்.
- கல்லூரியின் முன்னணி ஆங்கில ஆசிரியர்.
- இலங்கை இராணுவத் தொண்டர் படையின் 2 ஆம் லெப்டினன்டனாக நியமனம்.
- இக்கால கட்டத்தில் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஹொக்கி, மெய்வன்மை அணிகளுக்குத் தலைமை தாங்கினார். யாழ். மாவட்டத்தில் சிறந்த ஹொக்கி வீரராகத் திகழ்ந்ததோடு, 1963, 1964 இல் யாழ். மாவட்ட ஹொக்கி அணிகளுக்குத் தலைமை தாங்கி, கண்டி, மாத்தளையில் நடை பெற்ற ஹொக்கி தேசிய போட்டிகளில் சிறப்பாக விளையாடினார்.

**1965 ஜனவரி**

- 1966 டிசம்பர் வரை பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆங்கில (விசேட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி மாணவன். அங்கும் மெய்வன்மை நிகழ்ச்சிகள் மற்றும் புறநடவடிக் கைகளில் ஈடுபாடு.

**1967 ஜனவரி**

- ஆங்கில விசேட பயிற்சி பெற்ற ஆசிரியராக பதுளை ஊவா கல்லூரியில் நியமனம்.

**1967 மே**

- படைபயில் குழு நடவடிக்கைகளில் இவரின் திறமையைப் பயன்படுத்துவதற் காக பண்டாரவளை சென்.யோசப் கல்லூரி இவரை தன்னிடம் அழைத்துக் கொண்டது.

**1968 ஜனவரி**

- சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரிக்கு இடமாற்றம்.
- அதிபர் வி.தம்பு, எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோரின் கீழ் ஆசிரியராகப் பணி.
- விக்டோறியாக் கல்லூரியின் படைபயில் குழுப் பொறுப்பாளராகவும் விளை யாட்டுப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்தார். அவரது காலத்தில் யாழ்ப்பாணத் தில் சிறந்த படை பயில் குழுவாக விக்டோறியாக் கல்லூரி அணி திகழ்ந்தது
- ஹொக்கி விளையாட்டை விக்டோறியாக் கல்லூரியிலும் அறிமுகப் படுத்தினார்.
- தமது துணைவியார் கனகாம்பிகையை சந்திக்கவும் அதன் மூலம் காதல் திருமணம் நடக்கவும் களம் அமைத்தது விக்டோறியாக் கல்லூரி.

**1971 நடுப்பகுதி**

- 1971 கிளர்ச்சிக் காலத்தில் இராணுவப் பணிக்கு அழைப்பு, ஆனையிறவு, இயக்கச்சி, அநுராதபுரம், தலாவப் பகுதிகளில் தீரத்துடன் இராணுவப் பணி.

**1972 ஜூன்**

- யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம். ஓய்வு பெறும் வரை அதிபர்கள் திரு.என்.சபாரத்தினம், திரு.ஸி.சபாலிங்கம, திரு.பொ.ச.குமார சுவாமி, திரு.எஸ்.பொன்னம்பலம், திரு.க.சி.குகதாசன், திரு.அ.பஞ்சலிங்கம் ஆகியோரின் கீழ் பணி புரிந்தார். யாழ். இந்து படைபயில் குழுவின் பொறுப்பாசிரியர்.

**1973 ஜனவரி**

- யாழ். இந்து விளையாட்டுப் பொறுப்பாசிரியராக நியமனம். 1990 ஓகஸ்ட் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப் பதவியில் சேவை. இக்கால கட்டத்தில் யாழ். இந்து விளையாட்டுத்துறை பல்வேறு சிறப்புப் பெறுபேறுகளை எட்டியது. அவற்றில் சில :-

- 1973இல் 5 கிலோமீற்றர் வீதியோட்டப் போட்டி கல்லூரியில் அறிமுகம் செய்யப்பட்டது.
- 16 வருட கால இடைவெளிக்குப் பின் 1976 இல் கல்லூரியின் முதலாம் பிரிவு உதைபந்தாட்ட அணி யாழ். மாவட்ட சாம்பியனானது. 1978 இலும் சாம்பியன்.1974, 1975, 1976 இரண்டாம் பிரிவும், 1979 இல் மூன்றாம் பிரிவும் சாம்பியன்.பல தடவைகள் யாழ். இந்து அணிகள் இரண்டாம் இடத்தைப் பெற்றன.
- யாழ். மாவட்டத்திலிருந்து முதல் தடவையாக யாழ். இந்து வீரர்கள் இருவர் அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட அணிகளில் 1976, 1977 களில் இடம்பெற்று வெளிநாடுகளில் சென்று விளையாடினர் ஒருவர் கோல்காப்பு வீரர். மற்றையவரான சண். தயாளன் இலங்கைப் பாடசாலைகள் அணிகளுக்குத் தலைமை வகித்தார்.
- யாழ். கிரிக்கெட் அணிகள் இவரது காலத்தில் பல தடவைகள் யாழ் மாவட்டத்தில் சிறந்த அணிகளாகத் தெரிவாகின. 1979, 1984, 1986 களில் 15 வயதுப் பிரிவு அணிகளும் 1986, 1993 களில் 17 வயதுப் பிரிவு அணிகளும் சாம்பியனாகின. 1975 இல் 16 வயதுப் பிரிவு அணி அகில இலங்கையில் இரண்டாமிடத்தைப் பெற்றது. 1975 இலும் அடுத்து வந்த ஆண்டுகளிலும் முதலாம் பிரிவு கிரிக்கெட் அணிகள் யாழ்ப்பாணத்தில் தோற்கடிக்கப்படாத அணிகளாகத் திகழ்ந்தன. 1983 இல் வடக்கில் சிறந்த அணியாகத் தெரிவு செய்யப்பட்டது.
- 1973இல் பாடசாலையில் இவரால் ஹொக்கி அறிமுகப்படுத்தப்பட்டது. 1975 இல் 19 வயதுப் பிரிவு அணியும் 1977 இல் 17, 19 வயதுப் பிரிவு அணிகள் இரண்டும் யாழ். மாவட்ட சாம்பியனாகின. இந்த ஹொக்கி அணிகளுக்குப் பயிற்சியாளரும் இவரே.
- இவரது காலத்தில் 1973 முதல் 9 ஆண்டுகள் தொடர்ந்து யாழ். இந்து மெய்வன்மை அணிகள் யாழ். மாவட்டத்தில் சாம்பியனாக வந்தன. அகில இலங்கை ரீதியில் வெளிமாவட்டப் பாடசாலைகளுள் மைதான நிகழ்ச்சிகளுக்காக வழங்கப்படும் விசேட வெற்றிக் கிண்ணம் 1977, 1978 ஆகிய இரு ஆண்டுகளிலும் சுவீகரிக்கப்பட்டது. அகில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பாடசாலைகள் ரீதியில் இவரிடம் பயிற்சி பெற்ற மாணவனான ரீ.இரவீந்திரன் 45'4" பாய்ந்து முறியடிக்க முடியாத சாதனை ஒன்றை நிலை நாட்டினார். எஸ்.தயாளன் ஈட்டி எறிதல், தடியூன்றிப் பாய்தல் ஆகிய நிகழ்ச்சிகளிலும், எஸ்.கரன்சிங் தடியூன்றிப் பாய்தலிலும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தினர்.

- 1974 இல் கல்லூரியில் கூடைப்பந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது கல்லூரியின் 18 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்ட அணி 1977 இல் அகில இலங்கைப் பாடசாலைகள் சாம்பியனானது. 1976, 1977 ஆகிய இரு ஆண்டுகளிலும் யாழ். மாவட்ட சாம்பியனாக வந்தது.
- 1984 இல் மீண்டும் கல்லூரியில் கரப்பந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- கல்லூரி மாணவர் முதல்வர்களின் பொறுப்பாசிரியராகவும், விடுதி அதிபராகவும் நீண்டகாலம் பணி புரிந்தார்.
- 1981 இல் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவையும் பின்னர் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவையும் கல்லூரியில் ஆரம்பிக்கக் காரணமாக இருந்தார்.
- 1983 இல் இலங்கை இராணுவத் தொண்டர் படையின் கப்டனாக நியமனம். 1976 இல் கொழும்பில் நடைபெற்ற அணி சேரா நாடுகள் மாநாட்டின் போதும் 1981 இல் நடைபெற்ற பொதுநல அமைப்பு கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் போதும் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுத் தலைவர்கள் குழுக்களை கட்டுநாயக்காவில் வரவேற்கும் பாதுகாப்பு அதிகாரிகள் குழுக்களுக்கு பொறுப்பாளராகச் செயலாற்றினார்.

**1986 இல்**

- கல்லூரி பிரதி அதிபராக நியமனம். அன்று முதல் கல்லூரியின் சகல நிர்வாக விடயங்களிலும், நிதி விவகாரங்களிலும், ஒழுக்கம், கட்டுப்பாட்டைப் பேணுதல், புற நடவடிக்கைகளை விருத்தி செய்தல் ஆகியவற்றிலும் சிறப்புப் பணியாற்றினார்.
- 1989 இல் மேற்கத்திய பாண்ட் குழுவை கல்லூரியில் அமைத்து, கல்லூரியில் சிறந்த பாண்ட் அணியை உருவாக்கினார்.
- கல்லூரி நூற்றாண்டு விழா நிகழ்வை முன்னின்று நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26.12.1993**

- அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு.

- 1960முதல் பல்வேறு பொது அமைப்புகளிலும், விளையாட்டுச் சங்கங்களிலும் பொறுப்பான பதவிகளை அலங்கரித்து பெரும் சேவையாற்றினார். அவற்றில் சில : -

  - யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவராக, செயலாளராக பின் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளராக, தலைவராக.
  - யாழ். உதைபந்தாட்டச் சங்கம், யாழ். உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் உபதலைவராக.
  - யாழ். அமெச்சூர் மெய்வன்மை சங்கத்தினதும், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மை சங்கத்தினதும் உபதலைவராக.
  - யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கம், யாழ். பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம், ஹொக்கி மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றின் செயலாளராக.
  - யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் செயலாளராக.
  - யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் செயலாளராக.
  - யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தில் ஸ்தாபக உறுப்பினராக.
  - நீண்ட காலம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகச் செயலாளராகவும், உப தலைவராகவும், பின்னர் தலைவராகவும்.
  - யாழ். மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக.
  - சைவ பரிபாலன சபையின் தலைவர் மற்றும் உபதலைவராக.
  - யாழ். றோட்டறிக் கழகத்தின் தலைவராகவும் பிற பொறுப்பான பதவிகளிலும்.
  - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக, மற்றும் மூன்று மாடி விடுதிக் கட்டடக் குழுவின் தலைவராக.
  - வட மாகாண ஆசிரிய சங்க சகாய நிதிச் சங்கத்தின் உபதலைவராக, வட மாகாண ஆசிரிய சங்கப் பரீட்சைக் குழு உறுப்பினராக.

- ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மை சம்மேளனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொடக்குநராகவும், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் அங்கீ கரிக்கப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தராகவும், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஹொக்கி நடுவராகவும் நீண்டகாலம் பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழற் பதிவுகள்








யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரியில்
மாணவனாக....



1953 இல் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மெய்வல்லுநர் அணித் தலைவனாக... (அதிபர் திரு. வி. எம். ஆசைப்பிள்ளைக்கும் உப அதிபர் திரு. ஸி. சபாரத்தினத்துக்கும் இடையில் 75 ஆவது இலக்க பெனியன் அணிந்து அமர்ந்திருக்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1955 இல் உயர்தர இந்துக்கல்லூரி மாணவர் குழாத்தில்....
(2வது தொடரில் கடைசியாக நிற்பவர்)



உதைபந்தாட்ட மத்தியஸ்தராக..



ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக
ஹொக்கி அணிக்கு தலைவராக...
(நடுவில் அமர்ந்திருப்பவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவராக பொது நிகழ்வு ஒன்றில்....

கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்றின் ஆரம்ப நிகழ்வில் யாழ். நகரத்தின் 512 ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் காமினி ஜயசுந்தரவுடன்....





இராணுவக் கப்டனாக....

யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்ற நாளில் – மணி விழாவின்போது – வரவேற்கப்படும் ரீச்சரும் மாஸ்டரும்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மாவட்டத் தெரிவு அணி ஒன்றின் முகாமையா ளராக மலேசியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுலா சென்ற சமயம் விமானத்தில்....



ஜேர்மன் பழைய மாணவர் சங்க விழாவில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றச் சென்றிருந்த சமயம் பாரிஸ் ஈபிள் கோபுரத்தின் முன்னால்....



நிறைவாழ்வு வாழ்ந்த ஆசிரியத் தம்பதியர்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துக் கல்லூரியில் புதிய கட்டடத்துக்கான கால்கோள் விழாவின்போது....

கல்லூரி நூற்றாண்டு விழாவில் உரை நிகழ்த்திய போது....






நூற்றாண்டு விழாவில் கௌரவிக்கப்பட்டபோது ....

பிரபல டெஸ்ட் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுடன் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் தலைவர் கப்டன் சோமாவும் இந்நாள் தலைவர் கே.தர்மகுலசிங்கமும்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோட்டரிக் கழக உறுப்பி
னராக 1997இல் பதவி
யேற்றபோது....



சமாதான நீதிவானாகப்
பதவியேற்றபோது,
நண்பர்கள் புடைசூழ....




கிரிக்கெட் நிர்வாகக்
கடமையாக வெளிநாடு
பயணித்தபோது....



கடந்த மாதம் இந்தியத்
துணைத் தூதுவர்
நடராஜனுடன் யாழ்.
இந்துக் கல்லூரி
நிகழ்வில்....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1971 இல் இராணுவத் தொண்டர் படையின் அதிகாரியாக...



மரியாதையை ஏற்கும் அமைச்சர் செல்லையா குமாரசூரியர்



படை அதிகாரியாக "சல்யூட்"...




சக படை அதிகாரி ஒருவரின் சிரேஷ்ட படை அதிகாரியாக....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியில் இராணுவ அதிகாரி என். சோமசுந்தரம்...



துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியாளராக சோமசுந்தரம்....




1968 இல் விக்டோரியா கல்லூரி படைபயில் அணிக்குப் பொறுப்பாளராக... (அதிபர் திரு. தம்பருக்கு இடது புறத்தில் அமர்ந்திருக்கிறார்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டு நிகழ்வு ஒன்றில் அப் போதைய யாழ்ப்பாணத் தொகுதி நாடா ளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரதி அதிபராக...



1962 இல் யாழ் இந்து கனிஷ்ட படைபயில் குழுவின் பொறுப்பாளராக...
(வலது கோடியில் இரண்டாவதாக அமர்ந்திருக்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1973 இல் யாழ். இந்துக் கல்லூரி கனிஷ்ட படைபயில் குழுவின் பொறுப்பாளராக..



1973 இல் யாழ். இந்துக் கல்லூரி இரண்டாம் பிரிவு ஹொக்கி அணியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராக...



1973 இல் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். இந்து முதலாம் பிரிவு உதைபந்தாட்ட அணியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1984 இல் யாழ் மாவட்ட சாம்பியனாக வந்த யாழ் இந்துவின் 15 வயதுட் பிரிவு கிறிக்கட் அணியின் பொறுப்பாசிரியராக (தந்தைக்குப் பின்னால் நிற்பவர் மகன் சுரேஷ்)



எழுபதுகளில் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக உபதலைவராக இருந்த போது கழகத்தில் எடுத்துக் கொண்ட படம். வலது கோடியில் அமர்ந்திருப்பவர் கப்டன் சோமா.



1976 இல் யாழ். மாவட்ட சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். இந்து முதலாம் பிரிவு உதைபந்தாட்ட அணியின் விளையாட்டுப் பொறுப்பாளராக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1977 இல் யாழ். மாவட்ட சாம்பியனாக வந்த யாழ் இந்து மெய்வல்லுநர் அணியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவும் பயிற்றுனராகவும்...



1973 இல் யாழ். மாவட்ட சாம்பியனாக வந்த யாழ் இந்து இரண்டாம் பிரிவு அணியின் விளையாட்டுப் பொறுப்பாளராக...



1977 இல் அகில இலங்கை பாடசாலைகள் சாம்பியனாக வந்த யாழ். இந்து கூடைப்பந்தாட்ட அணியின் விளையாட்டுப் பொறுப்பாளராக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் இந்துக் கல்லூ
ரியின் இல்ல
மெய்வன்மைப்
போட்டி ஒன்றில்
வீர முதல்வனாகத்
தெரிவு செய்யப்பட்ட
மகன் சுரேஷ்
வெற்றிக்கிண்ணம்
பெறுவதை
விளையாட்டுப்
பொறுப்பாசிரியராக
புளகாங்கிதத்துடன்
பார்வையிடும்
தந்தை.



ஐம்பதுகளில் திருமலைக்கு விஜயம் செய்த யாழ் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணி திருமலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியுடன் எடுத்துக்கொண்ட படம். ஜொலிஸ்ரார்ஸ் வி.க. செயலாளராக வலது கோடியில் அமரந்திருப்பவர் சோமசுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993 இல் யாழ் மாவட்ட சம்பியனாக வந்த யாழ் இந்து 17 வயதுப் பிரிவு கிறிக்கற் அணியுடன் பிரதி அதிபராக...



1963 இல் யாழ். மாவட்ட சாம்பியனாக வந்த உடற் பயிற்சி அணியின் பயிற்சியாளர் மற்றும் பொறுப்பாசிரியராக... (உப அதிபர் திரு. என். சபாரத்தினத்திற்கு அருகில் அமர்ந்திருக்கிறார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கப்டன் என் சோமசுந்தரத்தின் கடைசி பொதுநிகழ்வு. 25.09.2015 அன்று
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக...

PRINT @ ANDRA PRINTERS - 021 221 7279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org